# பத்திரிக்கைச் செய்தி

## பள்ளிக் கல்வித் துறை
## சேலம் மாவட்டம்
## ஆய்வக உதவியாளர் பணியிடத்திற்கான நேரடி நியமனம்

---

சேலம் மாவட்டத்தில் காலியாக உள்ள ஆய்வக உதவியாளர் பணியிடங்களுக்கான நேரடி நியமனத்திற்கு 09.04.2017 மற்றும் 10.04.2017 ஆகிய நாட்களில் சான்றிதழ் சரிபார்ப்பு நடைபெற்றது. இச்சான்றிதழ் சரிபார்ப்புக்கு பின் நியமனம் பெற தகுதிவாய்ந்தோர் 173 நபர்களின் பட்டியல் இணைப்பில் கண்டுள்ளவாறு அனுப்பி வைக்கப்படுகிறது. இப்பட்டியல் www.salem.nic.in என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் உள்ளவர்களுக்கு நியமனங்களுக்கான கலந்தாய்வு வருகின்ற 17.04.2017 அன்று காலை 9.30 மணிக்கு சேலம், சிறுமலர் மேல்நிலைப் பள்ளியில் கலந்தாய்வு நடைபெறவுள்ளது. கலந்தாய்வில் கலந்துகொள்ள தெரிவு செய்யப்பட்ட பணிநாடுநர்கள் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு முன்னிலைப்படுத்தப்பட்ட அசல் ஆவணங்கள் கொண்டுவருதல் வேண்டும் எனவும் இவ்வலுவலகம் மூலம் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இடம் – சேலம்.
நாள் – 15.04.2017

முதன்மைக் கல்வி அலுவலர்,
சேலம்